## சுருக்கம்

நெடுஞ்சாலைத் துறை – நிலஎடுப்பு – திருநெல்வேலி மாவட்டம் – இராதாபுரம் வட்டம் – கூடன்குளம் கிராமம் – புல எண். 321/1 மற்றும் பிறவற்றில் சுமார் 0.26.12 ஹெக்டேர் நஞ்சை நிலங்களை தூத்துக்குடி–திருச்செந்தூர்–கன்னியாகுமரி இணைப்பு கிழக்கு கடற்கரைச்சாலை விரிவாக்கம் மற்றும் மேம்படுத்துதல் பணிக்கு மற்றும் புதிய புறவழிச்சாலை அமைக்கும் பணிக்காக – நிலஎடுப்பு செய்தல் – தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001–பிரிவு 15 (1)ன் கீழான அறிவிக்கையினை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுதல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.எஸ்.2) துறை

அரசாணை (டி) எண். 30

நாள் : 21–02–2018

ஹெவிளம்பி, மாசி–9, திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கவும்:–

திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் கடித எண். ஜே1/49996/2013, நாள் 25–09–2017 (ம) 01–11–2017

**********

ஆணை:

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கூடன்குளம் கிராமத்தில், புல எண். 321/1 மற்றும் பிறவற்றில் சுமார் 0.26.12 ஹெக்டேர் நஞ்சை நிலங்களை, தூத்துக்குடி–திருச்செந்தூர் –கன்னியாகுமரி இணைப்பு கிழக்கு கடற்கரைச்சாலை விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தும் பணிக்கும் மற்றும் சில இடங்களில் புதிய புறவழிச்சாலை அமைக்கும் பணிக்காகவும் கையகம் செய்ய, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட, தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001 பிரிவு 15(1)ன் கீழான அறிவிக்கைக்கு அரசால் ஏற்பளிக்கப்பட்டு, அதனை தமிழ்நாடு அரசிதழில் வெளியிட ஆணையிடப்படுகிறது.

2. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கையினை, தமிழ்நாடு அரசிதழில் அடுத்த வெளியீட்டில் வெளியிடுமாறும், அவ்வாறு வெளியிடப்படும் அரசிதழின் 10 நகல்களை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9 மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோருக்கு அனுப்புமாறும் அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79 (இணைப்புடன்),
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு),நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25.

மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி
மாவட்ட வருவாய் அலுவலர், திருநெல்வேலி

நகல்
வருவாய்த்துறை, சென்னை–9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச்செயலாளர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறு துறை முகங்கள் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
இருப்பு கோப்பு /உபரி நகல்

கோ.எண்.12076/எச்.எஸ்.2/2017

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## இணைப்பு

## அறிவிக்கை

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கூடன்குளம் கிராமத்தில், அமைந்துள்ளதும், கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான நிலங்கள் ஒரு பொது நோக்கத்திற்காக அதாவது தூத்துக்குடி–திருச்செந்தூர்–கன்னியாகுமரி இணைப்பு கிழக்கு கடற்கரைச்சாலை விரிவாக்கம் (ம) மேம்படுத்தும் பணிக்காகவும், புதிய புறவழிச்சாலை அமைக்கும் பணிக்காகவும் தேவைப்படுகிறது என்று தமிழ்நாடு அரசுக்கு தோன்றுவதால், அதன்படி, புல எண். 321/1 மற்றும் பிறவற்றில் சுமார் 0.26.12 ஹெக்டேர் நஞ்சை நிலங்களை (ம) கையகப்படுத்தவும் மற்றும் மேற்படி நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை நெடுஞ்சாலைத்துறையின் திருநெல்வேலி கோட்டப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அவர்களால் பராமரிக்கப்படும் வைப்புக் கணக்கிலிருந்து வழங்கவும் தீர்மானித்து, மேற்காணும் நிலங்களின் உரிமையாளர், உரிமை கோருபவர், அனுபவத்தில் வைத்துள்ளவர் அளித்த காரணங்களையும் பரிசீலனை செய்தபின், 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் பிரிவு 15 உட்பிரிவு (1) (தமிழ் நாடு சட்டம் 34/2002)–ன் கீழ் பின்வரும் அறிவிப்பு பிரசுரம் செய்யப்படுகிறது.

## அறிவிப்பு

தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் 2001, பிரிவு 15ன் உட்பிரிவு (1) (தமிழ்நாடு சட்டம் 34/2002)–ன் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள், திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கூடன்குளம் கிராமம், தூத்துக்குடி–திருச்செந்தூர்–கன்னியாகுமரி இணைப்பு கிழக்கு கடற்கரைச்சாலை விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தும் பணிக்காகவும், மற்றும் புதிய புறவழிச்சாலை அமைக்கும் பணிக்காகவும் கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சுமார் 0.26.12 ஹெக்டேர் நன்செய் நிலங்கள் கையப்படுத்தப்படுகிறது என இதன் மூலம் அறிவிக்கின்றார்.

இந்நிலங்களின் வரைப்படங்கள் சார் ஆட்சியர், சேரன்மகாதேவி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை அலுவலகப் பணி நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் பார்வையிடலாம்.

## அட்டவணை

மாவட்டம் : திருநெல்வேலி வட்டம்: இராதாபுரம்

கிராமம் : கூடன்குளம்

| வரிசை எண் | நன்செய் மற்றும் புன்செய் என்ற நிலத்தின் விவரிப்பும் புல எண்ணும் | நில உரிமையாளர்கள் / நிலத்தின் உரிமை கொண்டாடுபவர்கள் | தேவைப்படும் /கையகப்-படுத்தப்படும் நிலத்தின் பரப்பளவு ஹெக். ஏர். | நிலத்தில் உள்ள கட்டிடங்கள் /மரங்கள் / மற்றவை |
|---|---|---|---|---|
| 90. | 321/1B நன்செய் | தங்கம்மாள் க/பெ குருசாமி நாடார் | 0.07.05 | தரிசு |
| 91. | 321/2B நன்செய் | குருசாமி த/பெ பொன்னையா நாடார் | 0.01.46 | தரிசு |
| 92. | 321/3B நன்செய் | தங்கம்மாள் க/பெ குருசாமி நாடார் | 0.04.90 | தரிசு |
| 94. | 322/6B நன்செய் | தங்கபாண்டி நாடார் த/பெ பொன்னம்பல நாடார் | 0.00.12 | தரிசு |

| | | | | |
|---|---|---|---|---|
| 95. | 322/9B<br>நன்செய் | தங்கம்மாள்<br>க/பெ குருசாமி நாடார் | 0.02.04 | தரிசு |
| 96. | 322/12B<br>நன்செய் | தங்கம்மாள்<br>க/பெ குருசாமி நாடார் | 0.00.27 | தரிசு |
| 98. | 322/15B<br>நன்செய் | குருசாமி<br>த/பெ பொன்னையா நாடார் | 0.07.26 | தரிசு |
| 99. | 322/16B<br>நன்செய் | தங்கம்மாள்<br>க/பெ குருசாமி நாடார் | 0.01.78 | தரிசு |
| 156. | 474/1B2B<br>நன்செய் | ராஜபாண்டி நாடார்<br>த/பெ குமாரசாமி நாடார் | 0.00.11 | தரிசு |
| 161. | 475/4A2<br>நன்செய் | முருகேசன்<br>த/பெ பத்திரபாண்டி நாடார் | 0.01.13 | தரிசு |
| | | மொத்தம் | 0.26.12 | |

ஒப்பம்/–xx

ராஜீவ் ரஞ்சன்,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.